# BRAMPTON Service and Information Update

**கோவிட்-19 COVID-19 தொற்று பரவல் எதிர்ப்பு நடவடிக்கையாக ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையில் மே 4 ஆம் தேதி முதல் செய்யப்படும் மாற்றங்கள்**

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல் 29, 2020) –கோவிட் -19 (COVID-19) தொற்று பரவல் அவசரநிலைக் காலத்தில் தனது சமுதாயத்தினருக்கு பாதுகாப்பாக சேவையாற்றுவதை உறுதி செய்வதற்காக, மே 4 ஆம் தேதி முதல், அடுத்த அறிவிப்பு வரும் வரை, பேருந்து சேவைகள் பின்வருமாறு மாற்றம் செய்யப்படுகின்றன.

வழித்தடங்களில் கூடுதல் சேவைகளும் அதிகரித்த ஓட்டங்களும் மீண்டும் அறிமுகம் செய்யப்படுகின்றன; இது ப்ராம்ப்ட்டன் பகுதியில் இருக்கின்ற உடல் ஆரோக்கியப் பராமரிப்பு வசதியமைப்புக்கள் மற்றும் பணிக்கான இடங்களை அடையவும், இதர ப்ராம்ப்ட்டன் போக்குவரத்து சேவைகளுக்கான இணைப்பை கொடுக்கவும் மற்றும் மேம்படுத்தவுமே செய்யப்படுகிறது. நம்வசம் இருக்கும் பேருந்துகளின் எண்ணிக்கையைக் கொண்டு இந்த சேவைகளை நிலைக்க வைக்க மிகச்சிறந்த முயற்சிகள் எடுக்கப்படும்.

- **511/511A ஸூம் ஸ்டீல்ஸ்** – வார நாட்கள் காலையில் (காலை 6 முதல் 9 வரை) மற்றும் மாலையில் (3 மணி முதல் 7 வரை) மிகுந்த கூட்ட நேர ஓட்டங்கள் ஒவ்வொரு 20 நிமிடத்திற்கு ஒன்று என்பதில் இருந்து ஒவ்வொரு 10 நிமிடத்திற்கு ஒன்று என அதிகரிக்கப்படும்
- **7/7A கென்னடி** – வார நாட்கள் காலையில் (காலை 6 முதல் 9 வரை) மற்றும் மாலையில் (3 மணி முதல் 7 வரை) மிகுந்த கூட்ட நேர ஓட்டங்கள் ஒவ்வொரு 10 நிமிடத்திற்கு ஒன்று என அதிகரிக்கப்படும்
- **8 சென்டர்** – சனிக்கிழமை சேவை சேர்க்கப்பட்டது
- **14/14A டோர்ப்ரம்** – வார நாட்கள் காலையில் (காலை 6 முதல் 9 வரை) மற்றும் மாலையில் (3 மணி முதல் 7 வரை) மிகுந்த கூட்ட நேர ஓட்டங்கள் ஒவ்வொரு 10 நிமிடத்திற்கு ஒன்று என அதிகரிக்கப்படும்
- **18 டிக்ஸீ** – வார நாட்கள் காலையில் (காலை 6 முதல் 9 வரை) மற்றும் மாலையில் (3 மணி முதல் 7 வரை) மிகுந்த கூட்ட நேர ஓட்டங்கள் ஒவ்வொரு 15 நிமிடத்திற்கு ஒன்று என்பதில் இருந்து ஒவ்வொரு 7 நிமிடத்திற்கு ஒன்று என அதிகரிக்கப்படும்
- **20/20A ஈஸ்ட் இண்டஸ்ட்ரியல்** – திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை 20A சேவை மீண்டும் தொடர்கிறது
- **29 வில்லியம்ஸ் பார்க்வே** – திங்கள் முதல் சனிக்கிழமை வரை பகல் பொழுது (காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரையிலான) சேவை சேர்க்கப்பட்டது , ஞாயிற்றுக்கிழமை சேவை கிடையாது
- **31 மெக்வீன்** – திங்கள் முதல் சனிக்கிழமை வரை பகல் பொழுது (காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரையிலான) சேவை சேர்க்கப்பட்டது , ஞாயிற்றுக்கிழமை சேவை கிடையாது

- **51 ஹெரெஃபோர்ட் –** திங்கள் முதல் சனிக்கிழமை வரை பகல் பொழுது (காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரையிலான) சேவை சேர்க்கப்பட்டது , ஞாயிற்றுக்கிழமை சேவை கிடையாது
- **52 மெக்மர்ச்சி –** சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சேவை சேர்க்கப்பட்டது
- **60 மிஸ்ஸிஸ்ஸாகா –** திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை பகல் பொழுது (காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரையிலான) சேவை சேர்க்கப்பட்டது

கோவிட் -19 (COVID-19) தொற்று பரவல் காரணமாக சீனியர் ID மற்றும் வெட்டரன் கார்டுகள் வழங்கப்படுவதில்லை. அடுத்த அறிவிப்பு வரும் வரை தங்களிடம் ஏற்கெனவே இருக்கும் காலாவதியாகிவிட்ட கார்டுகளை பயணிகள் உபயோகித்துக்கொள்ளலாம்.

பேருந்து முனையங்களில் இருக்கின்ற வாடிக்கையாளர் சேவை மைய கவுன்ட்டர்கள் மூடப்பட்டே இருக்கும் என்பதை நினைவூட்டுகிறோம். மே மாதம் 4 ஆம் தேதி தொடங்கி, ப்ரமலியா, ப்ராம்ப்ட்டன் கேட்வே, மற்றும் டவுண்டவுன் பேருந்துமுனையங்களின் பணி நேரமானது காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை என மாற்றப்படும்.

தற்சமயம் நடப்பில் இருக்கின்ற பேருந்து சேவைகள் மற்றும் அவற்றுக்கான கால அட்டவணையைக் காண வருகை புரியவும்: www.bramptontransit.com .

**கோவிட் -19 (COVID-19) தொற்றுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகள்**

மேம்படுத்தப்பட்ட கால அட்டவணைப்படி பேருந்துகளைத் தூய்மைப்படுத்தி அவற்றில் கிருமிநாசினி தெளிக்கும் வேலை மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு 48 மணிக்கொரு முறை பேருந்துகளின் அனைத்து பரப்புகள், இயக்குபவர் அமருமிடம் மற்றும் அனைத்து இருக்கைகளையும் கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைப்பதே ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையின் இலக்காகும். தற்சமயம் பெரும்பாலான பேருந்துகளில் 24 மணி நேரத்திற்கு ஒருமுறை கிருமிநாசினி தெளிக்கப்படுகின்றன. பேருந்து முனையங்கள் மற்றும் நிறுத்தங்களில் உள்ள மேற்பரப்புகளும்கூட தினசரி அடிப்படையில் தூய்மைப்படுத்தி கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைக்கப்படும். பேருந்து பயணியர் தங்கள் கைவசம் தமது உபயோகத்திற்காக இதுபோன்ற கிருமி நாசினி, கைகளைக் கழுவும் சுகாதார பொருட்களை வைத்திருந்து தங்கள் கைகளை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆபத்துக்களைக் கண்காணிப்பதற்காக, பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) மற்றும் ப்ராம்ப்ட்டன் நகர அவசரகால நடவடிக்கைகளுக்கான அலுவலகம் (Brampton Emergency Measures Office) ஆகியோருடன் சேர்ந்து ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் நெருக்கமாக பணியாற்றி வருகிறது. வாடிக்கையான புது தகவல்களுக்காக வருகை புரியவும்: www.brampton.ca/covid19 மற்றும் சேவை பற்றிய புதுத்

தகவல்களுக்கு வருகை புரியவும்: bramptontransit.com அல்லது @bramptontransit ஐ ட்விட்டரில் பின்பற்றவும். கேள்விகள் ஏதுமிருந்தால், ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவைக்கான தொடர்பு மையத்தை 905.874.2999 என்ற எண்ணில் அழைத்து கேட்கலாம்.

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
*905-874-3426 | Monika.Duggal@brampton.ca*